Tiaano® Innovation In Inert Metals

**Ti Anode Fabricators Pvt. Ltd.**

An ISO 9001 : 2008 Certified

#48 Noothancharv. Madambakkam. Chennai – 126. India. Ph: 0091 44 2278 1148 Fax: 22781362 Email: info@tianode.com web: www.tianode.com

# "கண்டம் விட்டு கண்டம் தாண்டி நாளை அண்டம் ஆளும் இந்தியா"

## GOAL 2014-2015

- **Endeavor** : QUALITY
- **Turnover Target** : 6.25% ↑
- **Products for …**
  - Consumer Market : 3%
  - Green Environment : 25%
- **Rejection Rate** :100% ↓

## TESTIMONIALS

- **Customers…**
  - Up to Nov. 14 : 805 Nos.
  - Up to Oct. 14 : 798 Nos.
- **Performance Nov. 14 …**
  - Turnover growth : 2.90%
  - Employment growth : -0.56%
  - 100% Attendance : 12.77%

## MANAGEMENT

- **Managing Director**
  - Mr. Velappan Jeyakummar
- **Board of Directors**
  - Ms. P.E. Nancy
  - Mrs. J. Vanajambika Jeyakummar

## OUR FORMULATIONS

Tiaano – Electro Chemical & Exotic Metal Equipments


Aquafil – Water Disinfection Equipments.

Fib Tec Composite – FRP/ GRP Mandrels & Tanks

HydroGen – HHO Generators

Titanictrade – Portal for Exotic Metals

– Tiaano Vidyashrm (CBSE Pattern School)




## உண்மை!

கணக்கு பேராசிரியர் ஒருவர் ஒவ்வொரு முறை கணக்கு தேர்வு நடத்தும் முன்பும் தன் மாணவர்களிடம் இப்படி கூறுவார்.

இன்று உங்களுக்கு இரண்டு பரீட்சை வைக்கிறேன். ஒன்று கணக்குப் பரீட்சை, அடுத்தது உண்மை பரீட்சை! நீங்கள் இரண்டு பரீட்சைகளிலுமே வெற்றி பெறுவீர்கள் என்று நம்புகிறேன்.

ஒரு மாணவன், தன் அப்பாவின் வேலை மாறுதல் காரணமாக அந்த கல்லூரியில் வருட இறுதியில்தான் சேர்ந்திருந்தான். அவனுக்கு இந்த கணக்கு பேராசிரியரைப் பற்றியோ, ஒவ்வொரு முறையும் பரீட்சைக்குமுன் அவர் இப்படி சொல்லுவார் என்றோ தெரியாது. முதல் முறை என்பதால் அவர் சொல்லியது அவனுக்கு புரியவேயில்லை. திருதிருவென விழித்தான். பக்கத்திலிருந்த பையனிடம் 'இன்று ஒரு பரீட்சை தானே?' என்று கேட்டான். அவன் கணக்கு பரீட்சை எழுதும் மும்முரத்தில் இவன் கேட்டதை கவனிக்கவே இல்லை.

தூரத்தில் இருந்து இதை கவனித்த பேராசிரியர், அந்த மாணவனின் பக்கத்தில் வந்தார். "நான் எப்போதுமே இந்த வரிகளை சொல்லுவேன். நீ புதுசா வந்ததினாலே உனக்கு புரியவில்லை. நீ கணக்கு பரீட்சை மட்டும் தான் இன்று எழுதப்போற ஆனால், அதை மற்றவர்களிடம் கேட்டு எழுதுவதோ, புத்தகத்தை பார்த்து செய்வதோ…போன்ற உண்மையற்ற விதங்களில் செய்யக்கூடாது என்பதற்காக தான், ஒவ்வொரு முறை தேர்வுக்கு முன்பும் நீங்கள் இரண்டு பரீட்சை எழுத போகிறீர்கள் என்று சொல்லுவேன்" என்றார் பேராசிரியர்.

அவர் மேலும் தொடர்ந்து, 'நீ இன்று எழுதுகிற கணக்கு தேர்வு சரியாக எழுதாமல் போகலாம். ஆனால் திரும்பவும் அதை படித்து சரியாக எழுதி விடலாம். நல்ல மதிப்பெண்களும் எடுத்து விடலாம் ஒரு வேளை ஏதோ ஒன்றில் நீ தோல்வி அடைய நேரிடும் என்றால், அது கணக்கு பரீட்சையாகவே இருக்கட்டும்.

ஏனென்றால் கணக்கிலே தேர்ச்சி அடைய முடியாத பலர் இன்று உலகத்திலே பண்புள்ள மனிதர்களாக இருக்கிறார்கள். ஆனால் உண்மை என்ற பரீட்சையில் தேர்ச்சி அடையாத எவருமே உயர்ந்தவராகவோ, பண்புள்ள மனிதர்களாகவோ இருக்க முடியாது. உண்மை என்கிற நற்பண்பு ஒரு மனிதனுக்கு வாழ்நாள் முழுவதும் தேவையானது.

Compiled By : Ms. P.E. Nancy
Director – Admin

## Believe in yourself

Believe in yourself and you can achieve,
Things you never thought possible.
Believe in yourself and you can discover,
New talents hidden inside you.

Believe in yourself and you can discern,
New depths in your life.
Believe in yourself and you can perform,
Way beyond your expectations.

Compiled By : Mrs. K. Shreemadhi
Administration

## FUNCTIONAL WISHES




**Happy New Year**
**01st JANUARY**



**Happy Pongal**
**14th JANUARY**




**Happy Republic Day**
**26th JANUARY**

**Best Wishes from Tiaano Employees**

## EXTERNAL SUPPORT

| | |
|---|---|
| Banking | : M/s. UCO Bank |
| Auditing | : M/s. Nisar & Kumar |
| AQ Auditing | : M/s. Juran Quality |
| Legal Advisers | : Lr. M.K. Govindan |
| | : Lr. V. Benedict Vincent |
| Tech. Consultant | : Dr.G.S. Viswanath |
| Central Excise | : Mr. R. Raghavan |
| Health Care | : M/s. Bethesda Hospital |
| | Tel: 22294565 |
| | : M/s. Jeya Clinic |
| | Tel: 098408 73107 |

## BIRTH DAY WISHES

எந்தக் குழந்தையும் நல்லக் குழந்தைதான் மண்ணில் பிறக்கையிலே!
அவர் நல்லவராவதும் தீயவராவதும் அன்னை வளர்ப்பினிலே!

**Mrs. K. Ramani** — **01st Jan.**
Administration

**Mr. R. Manikandan** — **01st Jan.**
Purchase

**Mr. G. Ravindran** — **06th Jan.**
Finance

**Mr. C. Siva Kumar** — **10th Jan.**
Production

**Mr. R. Manikandan** — **14th Jan.**
Coating

**Mr. P. Munuswamy** — **19th Jan.**
Fibtec

**Mrs. S. SasiRekha** — **19th Jan.**
Marketing



**Mr. S. YagaValli** — **20th Jan.**
Administration

**Mr. M. NagaRajan** — **20th Jan.**
Production

**Mr. G. Murugesan** — **21st Jan.**
Purchase

**Mr. P. Seenivasan** — **23rd Jan.**
Administration

**Mrs. M. Sudha** — **26th Jan.**
Marketing

**Mrs. J. Vanajambika Jeyakumar** — **27th Jan.**
Director – Technical

**Mr. A. Nazir Khan** — **30th Jan.**
Administration

**Best Wishes from Tiaano Employees**

## கான்ஃபிடன்ஸ் கார்னர்

குறைகளை நிறைகளாக்கிக் கொள்வது பற்றி எழுதியும் பேசியும் வருகிறோம். அதை ஒரு மனிதர் தன் வாழ்வாகவே வரித்துக் கொண்டார். பிறக்கும் போதே அவருக்குப் பார்வை பலவீனம். ஆனால் இரவுப் பொழுதுகளிலும் குறி பார்த்துச் சுடுகிற வேட்டைக்காரராய் வளர்ந்தார். ஒரு காது கேட்காது. ஆனால், பறவைகளின் ஒலிகளை வைத்தே அவை என்ன பறவைகள் என்பதைச் சொல்ல முடிந்தது, அவரால்.

நோய்வாய்ப்பட்டு உடல் முழுவதும் தாங்கமுடியாத வலியெடுத்த காலத்திலும் தன் பணிகளை உற்சாகமாகச் செய்தார். கடைசியில் மருத்துவர், "இருக்கையை விட்டு நீங்கள் அசையக் கூடாது" என்ற போது, "அதனாலென்ன? அப்படியும் வாழலாமே" என்று மனந்தளராமல் சொன்னார். அவர்...அமெரிக்க அதிபர் ரூஸ்வெல்ட்

—கான்ஃபிடன்ஸ் கார்னர் என்ற நூலிலிருந்து தொகுக்கப்பட்டது

## என்னதான் நடக்கும் — நடக்கட்டுமே!

ஒருவர் அறிவாளியாக, திறமைசாலியாக இருக்க வேண்டும் என்பதையெல்லாம் தாண்டி தன் உணர்ச்சிகளை எப்படி நிர்வாகம் செய்வது என்கிற கலை தெரிந்தவராக இருக்க வேண்டும் என்று தான் இன்றைய நிர்வாக இயல் வலியுறுத்துகிறது.

ஒருவர் தன் வேலையில் எவ்வளவு திறமைசாலியாக இருந்து என்ன பயன்! அலுவலகத்தில் தன்னோடு வேலை பார்க்கும் சக ஊழியர்களோடு சதா காலமும் சண்டையிடுகிறவர்கள், மேலதிகாரிகளோடு முரண்டு பிடிக்கிறவர்கள், தம் கீழே பணிபுரிகிறவர்களை மனம் நொறுங்க வைத்து வேலை பார்க்கும் ஆர்வமே அற்றவர்களாக ஆக்கி விடுபவர்கள்... இவர்கள் எந்த வேலைக்கும் இலாயக்கற்றவர்கள். இவர்கள் எத்தனை பெரிய திறமைசாலிகள் என்றாலும் அவர்கள் தங்கள் அலுவலகத்திற்குத் தேவை இல்லை என்று முடிவு செய்து வெளியே வீசிவிட்டது இன்றைய மேலாண்மை இயல்.

தங்கள் கோபமோ, மகிழ்ச்சியோ, வருத்தமோ எதுவானாலும் அதனை அடக்கி வாசிப்பவர்களை, நிதானம் தவறாதவர்களை நிர்வாகத்தின் பெரும் சொத்து என்கிறார்கள் மேலாண்மை இயல் மேதைகள். போகுஜு என்றொரு ஜென் குரு. அவரது வாழ்வில் ஒரு சம்பவம். ஒருமுறை ஒரு மோசமான மனிதன் ஒரு மரக்கிளையை எடுத்து அவரை அடித்துவிட்டு கிளையைக் கீழே வீசிவிட்டு வேகமாக நடக்கலானான். போகுஜு அந்தக் கிளையை எடுத்துக் கொண்டு ஓடிப் போய் மீண்டும் அவனிடம் நீட்டினார். அவன் அதை வாங்கி மீண்டும் கீழே எறிந்துவிட்டு வேகமாக நடக்கலானான்.

ஆனால் அவனால் முன்போல் இயல்பாக நடக்க முடியவில்லை. போகுஜுவின் செயல் அவனை ஏதோ செய்யத் தொடங்கிவிட்டது. தன் செயல் தவறு என்ற குற்ற உணர்வை அவனுள் தூண்டியிருக்கலாம். அவனுள் தடுமாற்றம் ஏற்பட்டுவிட்டது. ஆனால் சுற்றி இருந்தவர்கள் போகுஜுயைப் பார்த்து "நீங்கள் என்ன பைத்தியமா? அவனைத் திருப்பி அடித்திருக்க வேண்டும். அதைச் செய்யாமல் ஏன் அந்தக் கிளையை எடுத்துக் கொண்டுபோய் அவனிடம் நீட்டினீர்கள்...? அவனை ஏன் அடிக்கவில்லை?" என்று கேட்டார்கள். உடனே போகுஜு "நான் மரத்தின் கீழ் நடக்கும் போது ஒரு மரக்கிளை முறிந்து என் கைகள் மேல் வீழ்ந்தால் நான் மரத்தின் மீது கோபப்பட முடியுமா? மரத்தை அடிக்க

## தெரிந்து கொள்வோம்

### கோலமும் அதன் பலன்களும்

வாசலில் விடியற்காலையில் கோலம் போடுவதால் போடுவோருக்கு தூய்மையான காற்று உட்கொள்ளப்படும். அது மனதிற்கும், உடலுக்கும் புத்துணர்வைத் தரும்.

குனிந்தே கோலம் போடவேண்டும் என்ற நம்பிக்கை காரணமாக உடலுக்கு நல்ல உடற்பயிற்சியாகக் கோலம் அமைகிறது.

கோலமிடுவதால் கணக்கியல் அறிவு பெருகும். தொடங்கிய இடத்திலிருந்து சுற்றி வளைத்து நெளித்து, சுளித்து இறுதியாக முடிக்கும் இடம் வரை கவனித்து ஒருமித்துக் கோலமிடுவதால் ஒழுங்குணர்வு ஏற்படும்.

கோலம் இட்டால் சிக்கல் தீர்ந்து முடிவு அறியும் திறன் வளரும். கை விரல்களுக்கு நல்ல பயிற்சி கிடைக்கும். கற்பனை திறன் வளரும்.

இன்றைய கணிப்பொறி வளர்ச்சியின் தொடக்கக் கூறாக இந்தக் கோலம் அமைந்துள்ளது எனலாம்.

Compiled By : Mrs. C. Bavani
Administration

### Human Body Facts

- Eyes stay the same size throughout life but nose and ears never stop growing..
- Heart circulates blood in your body about 1000 times each day.
- The only part of your body that has no blood supply is the cornea in the eye. It gets its oxygen directly from air.
- Men lose about 40 hairs in a day and women lose 70 hairs in a day.
- Tongue is the strongest muscle in human body.
- Smallest bone of body is in ears.
- 80% of the brain is water.
- Eyes Blink about 20000 times a day.
- Our fingers are so sensitive that they can detect a vibration with a movement of 0.02 cm. Our "finger nails" grow at the rate of about 0.05 mm in a week and hair about 3 mm in a week.

Collected from Internet

முடியுமா? அது போலத்தான் இந்தச் சம்பவத்தை எடுத்துக் கொள்கிறேன்" என்றார். "அது மரம்... இவன் மனிதல்லவா" என்றனர் மற்றவர்.

"இவனுக்கும், மரத்துக்கும் என்ன பெரிய வித்தியாசம் இருக்கிறது... பிறர் வலி பற்றி எந்தப் பிரச்சனையும் இன்றி மரம் எதிர்பாராமல் பிறரைக் காயப்படுத்துவது போலவே, இவனும் என்னைக் காயப்படுத்துகிறான்... மரம் என்னைக் காயப்படுத்தினால் அதை எப்படி எடுத்துக் கொள்வேனோ, அப்படியே இதையும் நான் எடுத்துக் கொண்டேன்" என்றார் அந்த ஜென் குரு. இது ஒரு புதிய பார்வை. ஆனால் உண்மையில் அவசியமான ஒன்று. ஜென் குருமார்கள்.

இன்னொரு உதாரணமும் சொல்லுவதுண்டு. படகில் நாம் போகும்போது ஆற்றில் மிதந்து வரும் காலிப்படகு ஒன்று நம் படகின் மீது மோதி நாம் கவிழ நேர்ந்தால் நாம் காலிப்படகை நோக்கி வருத்தமோ, கோபமோ அடைய முடியுமா? அது போலவே படகில் ஒரு மனிதன் அமர்ந்து கொண்டு வந்து நம் மீது மோதினாலும் அவனைக் கோபிப்பதில் அர்த்தம் இல்லை.

அவன் அதில் இருந்தும் இல்லை... அவன் இருந்தாலும் ஒன்றுதான்... இல்லாவிட்டாலும் ஒன்றுதான்... காரணம் அவனே ஒரு காலிப் படகு... என்கிறது ஜென். வாழ்வில் நம்மைத் தாக்கும் மோதல்களைக் காலிப்படகுகளின் மோதல்களாக எடுத்துக் கொள்ளும்படி ஜென் குருமார்கள் போதிக்கிறார்கள். காலிப் படகு என்கிற வார்த்தையை மூளையற்ற மனிதர்கள் என்ற அர்த்தத்தில் கையாளுகிறது ஜென்.

இதிகாச காலத்திலேயே இத்தகைய உணர்ச்சி நிர்வாக வலிமை இராமனிடம் இருந்தது என்கிறார் கம்பர். ஆட்சி உனக்கு என்று அப்பா சொன்னபோது ஆட்டம் பாட்டமில்லை. ஆட்சி பரதனுக்கு... உனக்கு இல்லை என்று சிற்றன்னை சொன்னபோது அழுகை இல்லை...துன்பம் இல்லை... துடிப்பும் இல்லை... தன் உணர்ச்சிகளின் மீது இராமனுக்குள்ள ஆளுமையை "சித்திரத்தில் வரைந்த தாமரை எப்படி எப்போதும் ஒரே மாதிரியாகச் சிரித்தபடி இருக்குமோ அப்படி இருந்தது இராமர் முகம் என்கிறார்.

பாராட்டுக்கூட அப்படித்தான்... மிகையாக, அளவுக்கு அதிகமான உணர்ச்சியோடு சிலர் பாராட்டுவார்கள். இது நல்லதல்ல. பாராட்டும் போதும், ஒருவரை வசைபாடும்போதும் சரி சொற்களைக் கவனமாகக் கையாள வேண்டும். சிலர் தடித்த துக்கம் பிடித்த அழுகிய ஆயுதம் தாங்கியச் சொற்களைப் பயன்படுத்தி இடியாப்ப சிக்கல்களில் மாட்டிக் கொள்கிறார்கள். கோபத்திலும் சரி, பாராட்டிலும் சரி ஒரு நிதானத்தைக் கையாண்டால் மறுபடி ஒட்டவோ வெட்டவோ வசதி இருக்கிறது என்று வளர நினைப்பவர்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

Compiled By : Mr. K. Manivannan
Marketing

### நம்பித்தான் ஆகவேண்டும்

### 5S (தொடர்ச்சி XXXVI)

**அஞ்சறைப் பெட்டி**

பன்னாட்டு நிறுவனம் ஒன்று, தனது இந்தியக் கிளையைத் திறப்பதற்காகப் பெரிய விழா ஒன்றுக்கு ஏற்பாடு செய்திருந்தது. அரசியல்வாதிகள், சினிமா, சின்னத்திரை நடிகர் – நடிகையர், விளையாட்டு வீரர்கள் என்று நட்சத்திர விருந்தினர் கூட்டம்.

விழாவை, குத்துவிளக்கு ஏற்றித் தொடங்கி வைப்பதற்கு அமைச்சர்

## கவிதைகள்

### "உலகம் உன்கையில்"

மாறும் உலகிற்கு மாறிடனும், மாற்றங்களை
மனதால் ஏற்றுக்கணும்!
வாழும் உலகில் உயர்த்திடனும்,
வாழ்க்கையை பாடமாய் மாற்றிடனும்!
கலாம் ஐயா – கனவை கண்டிடனும்,
காலத்தை கரத்தால் ஏந்திடனும்!
பசுமை செழுத்திட செய்திடனும்,
பகைமையை புகையாய் பொசுக்கிடனும்!
மாசுவை மாற்றத்தால் தொலைத்திடனும்,
நாசினியில் நற்காற்றை சுவைத்திடனும்!
பாரினில் பண்புற உழைத்திடனும்,
பாதையை சீராய் வகுத்திடனும்!
இளமையில் உழைப்பாழியாய் இருந்திடனும்,
முதுமையில் முதலாளியாய் முன்னேறிடனும்!
அன்பால் அனைவரையும் அணைத்திடனும்,
அறிவால் உலகை அளந்திடனும்!

Compiled By : Selvi. P. Pararasi
D/o. M. Pullan

### விடுகதை

* சின்னஞ்சிறு கதவுகள், செய்யாத கதவுகள் திறந்தாலும் மூடினாலும் சத்தம் செய்யாத கதவுகள், அவை என்ன? – கண்.
* இடி இடிக்கும், மின்னல் மின்னும், ஆனால் மழை பெய்யாது, அ∴து என்ன? – பட்டாசு.

Compiled By : Master.J. Mishel
Tiaano Vidyashrm(3rd Std.)

## சிந்தனைக்கு

நல்லனவோ தீயனவோ ஒரு செயலைச் செய்துவிட்டால், மீண்டும் அதைப்பற்றி ஒரு போதும் நினைக்காதே, செய்தது செய்தாயிற்று. மூட நம்பிக்கையைத் தூர எறி. மரணமே எதிர் வந்தாலும் பலவீனத்திற்கு இடம் கொடுக்காதே. கழிந்ததை எண்ணிக் கலங்காதே, சென்றதைக் குறித்துச் சிந்திக்காதே, உன் நற்செயல்களையும் நினைவில் வைக்காதே. சுதந்திரமாக இரு.

Compiled By : Mrs. R. Jayanthi
Purchase

பணியாளர்கள் மற்றும் பணியாளர்களின் குடும்பத்தாரிடமிருந்து கவிதைகள், கட்டுரைகள், கதைகள் வரவேற்கப்படுகிறது.
– Editor

ஒருவரை அழைத்திருந்தார்கள். அவரும் சொன்ன நேரத்துக்கு ஏஸி காரில் வந்து இறங்கிவிட்டார். நிறுவனத்தின் உயர் அதிகாரிகள் சிலர் உரிய மரியாதைகளுடன் வரவேற்று மேடைக்கு அழைத்துச் சென்றார்கள். 'இப்போது அமைச்சர் அவர்கள் குத்து விளக்கை ஏற்றிவைப்பார்!' என்று மைக்கில் அறிவித்தாகிவிட்டது.

ஆனால், அப்போதுதான் யாரோ கவனித்தார்கள். குத்து விளக்கை ஏற்றுவதற்கு ஒரு மெழுகுவர்த்தி அல்லது அட்லீஸ்ட் ஒரு தீப்பெட்டியாவது இருக்கவேண்டுமில்லையா? அதைக் காணோம்!

அமைச்சர் குத்துவிளக்கு அருகே நின்றபடி காத்துக் கொண்டிருக்கிறார். மற்றவர்கள் எல்லாரும் என்ன செய்வது என்று புரியாமல் திருதிருவென்று ஒருவரையொருவர் பார்த்தபடி விழித்துக் கொண்டிருக்கிறார்கள்.

அதிபுத்திசாலியான அதிகாரி ஒருவர், நிலைமையை சமாளிப்பதாக நினைத்துக்கொண்டு, தன்னுடைய பாக்கெட்டிலிருந்து சிகரெட் லைட்டர் ஒன்றை எடுத்து நீட்டுகிறார். அவரைக் கடுமையாக முறைத்தப்படி அமைச்சர் மேடையிலிருந்து வெளியேறி விடுகிறார்.

தொழில்துறை, தனிப்பட்ட வாழ்க்கை என்று எதுவானாலும், தேவையான நேரத்தில், தேவையான பொருள் கைக்குக் கிடைக்காத போது ஏற்படும் இழப்புகள் மிகவும் தீவிரமானவை.

'5S'- ன் முதல் தத்துவமான 'செய்ரி' யில், எது தேவை, எது தேவையில்லை என்று பிரித்துப் பார்க்கப் பழகினோம். அப்படி பிரித்த பிறகு, அடுத்து என்ன செய்ய வேண்டும் என்பதைச் சொல்லித் தருகிறது இரண்டாவது தத்துவமான 'செய்டன்'.

நமக்குத் தேவையான பொருள்கள் எல்லாவற்றையும், அவற்றுக்குரிய இடத்தில், சுலபமாக எடுக்கும்படி வைக்கவேண்டும் என்பதுதான் 'செய்டன்' சொல்கிற அடிப்படைப் பாடம்.

ஆனால், அந்த 'அவற்றுக்குரிய இடம்' எது? அதை முடிவு செய்வதில் தான் பிரச்சனை தொடங்குகிறது.

ஒரு தொழிற்சாலையை எடுத்துக் கொண்டால், ஏகப்பட்ட கருவிகள், உபகரணங்கள், மூலப்பொருள்கள், பாதி வேலை முடிந்த பொருள்கள் என்று அவசியமான பொருள்கள் ஏகப்பட்டது இருக்கும்.

தொடரும்…

### Heat Exchanger

